Registerd as a News Paper [illegible] பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 13 [27-06-93] ஞாயிற்றுக்கிழமை ஓசை 129

## க. பொ. த. (சா.த) விண்ணப்பம் யாழ். கல்வித்திணைக்களம் வந்தது

[யாழ்ப்பாணம்]

1993ஆம் ஆண்டு டிசம்பர் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சைக்குரியபாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ். கல்வித் திணைக்களத்தால் எடுத்துவரப்பட்டுள்ளன. மேற்படி விண்ணப்பப்படிவங்கள் அவ்வப்பகுதி கோட்டங்களினால்வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். மேலும் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட கோட்டங்களில் மேற்படி விண்ணப் பப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார். [பா]

# வடபகுதி மக்களின் தேவைப்பட்டியல்

# பிரிகேடியரிடம் இன்று புலிகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்க திணைக்களங்கள் தயாரித்த தடைநீங்கிய பொருள்களின் தேவைப்பட்டியலை இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் ஜனாதிபதியின் தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவிடம் சமர்ப்பிக்கவுள்ளனர். இதன் அடிப் படையில் வடபகுதிக்கு உடன் பொருள்களை அனுப்பி வைக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோருவர் எனத் தெரியவருகின்றது.

போர் கைதிகளின் விடுதலை தொடர்பாக இடம்பெற்ற இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையின் போது தடை நீக்கப்பட்ட பொருள்கள் கணிசமான அளவில் மக்களுக்கு கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிய பின்னரே கைதிகள் விடுதலை செய்யப்படுவர் என அரசாங்கத்திற்கு புலிகள் இயக்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்ததே.

இந் நிலையிலேயே இன்று விடுதலைப்புலிகள் அரச திணைக்களங்கள் தயாரித்த தடை நீங்கிய பொருள்களின் பட்டியலை ஜனாதிபதியின் தூதுவரான பிரிகேடியர் வீரசேகராவிடம் சமர்பிக்கவுள்ளனர்.

இப்பட்டியலில் காணப்படும் கணிசமானதொகை வடபகுதி வந்தடைந்ததும் விடுதலைப் புலிகள் இயக்கம் தடுத்து வைத்துள்ள கைதிகளை விடுதலை செய்வார்கள் எனத் தெரியவருகின்றது.

# தடை நீக்கிய பொருள்களை விரைவில் அனுப்பிவைக்குக!

## கைதிகள் விடுவிக்கப்பட்ட பின்பும் பேச்சுகள் தொடரும்

### பிரிகேடியர் வீரசேகரா தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தக்கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்ட பின்னரும் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தை தொடரும் என பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ''அரசாங்கம தங்களுடன் நேரடியாகப் பேச வேண்டும் என்பதையே புலிகளின் விருப்பமாக இருக்கிறது. இடையில் வேறு எவரும் தலையிடுவதை புலிகள் விரும்பவில்லை என்பதை உணரமுடிந்தது.

என்னை அவர்கள் நன்றாக வரவேற்று உபசரித்தனர். கௌரவமாக நடத்தினர், அவர்களுடன் நான் நடத்திய பேச்சுவார்த்தை அனைத்துமே சிநேகபூர்வமானவையாக அமைந்தன'' என்றார்.

## ஐந்து பொலிசாருக்கும் பதவி உயர்வு கிடைக்கும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட ஐந்து பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கும் சார்ஜன்டுகளாக பதவி உயர்வு வழங்கவும் ஒவ்வொருவருக்கும் ஒரு லட்சம் ரூபா வீதம் சன்மானம் வழங்கவும் சிறிலங்கா பொலிஸ் தலைமைப் பீடம் முடிவுசெய்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் கோரப்பட்டிருப்பதாகவும் அனுமதி கிடைத்தவுடன் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் தலைமையக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிஒருவர்தெரிவித்தார்.

### இராணுவத்தின் மிதிவெடியில்

## சிக்கிய குடும்பப் பெண் வலதுகாலை இழந்தார்

சிறிலங்கா இராணுவத்தின ... நேற்றுமுன் தினம் மாலை 4-30

## நேற்றைய பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் வற்புறுத்து

(யாழ்ப்பாணம்]

வடபகுதி மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் தடை நீக்கப்பட்ட பொருள்களை உடன் அனுப்பிவைக்க அவசர நடவடிக்கைகளை அரசாங ...

... பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர், அரசின் தரப்பில் பிரிகேடியர் வீரசேகரா கலந்து கொண்டார். இப் பேச்சுவார்த்தையில் அரச அதிபரும் கலந்து கொண்டார்.

தடை நீக்கப்பட்ட பொருள்களை விரைவில் வட பகுதிக்கு ...

## வீரவணக்கம்

## இரு பெண்[illegible] கைது

(கொழும்பு)

''ரிமோட் கொன்றோல்'' கொண்டுவந்த இரு பெண்கள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பிரச்சினையை தீர்க்க அரசுக்கு விருப்பமில்லை

### ஏசியன் சேர்வே கருத்து

1983ஆம் ஆண்டு முதலே தொடர்ந்து வரும் இன வன்முறையின் கொடுமையினை எடுத்து நோக்கி, சிறிலங்கா அரசுக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கோ, அணுகுவதற்கோ எந்தவித விருப்பமும் இல்லை. ஆற்றலும் இல்லை.

இவ்வாறு ஏசியன் சேர்வே எழுதியுள்ளது.

## பிரிகேடியர் வீரசேகரா நேற்று வந்து சேர்ந்தார்

கொழும்புக்குச் சென்றிருந்த ஜனாதிபதியின் விசேட தூதுவர் பிரிகேடியர் வீரசேகரா நேற்றுக் காலை 'குமண' கப்பலில் பருத்தித்துறையை வந்தடைந்தார். இவருடன் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் வந்திருந்தார்.

இவர்கள் இருவரும் பருத்தித்துறை துறைமுகத்திற்கு சரியாக 7.30 மணிக்கு வந்தனர். இவர்களை ஏற்றிச் செல்வதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிட பிரதிநிதியும், விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் 7.15 மணிக்கு ... திருந்தனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வதிவிட பிரதிநிதியும், விடுதலைப் புலிகள் பிரமுகரான திரு. தங்கனும் கப்பலுக்கு சென்று பிரிகேடியரை அழைத்து வந்தனர். துறைமுகப் பகுதியில் யாழ் மாவட்ட தளபதி திரு. அன்பு, திரு. தயாநிதி மற்றும்பலரும் நின்றனர்.

யாழ்ப்பாணம் நோக்கிவந்த அரசஅதிபரையும், தூதுவரையும் துறைமுகத்திலிருந்து வாகனங்களில் ஏற்றிவந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையினர் ...

என பிரிகேடியர் ஆனந்த வீர சேகரா கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ''அரசாங்கம் தங்களுடன் நேரடியாகப் பேச வேண்டும் என்பதையே புலிகளின் விருப்ப

... கௌரவமாக நடத்தினர். அவர்களுடன் நான் நடத்திய பேச்சுவார்த்தை அனைத்துமே சிநேகபூர்வமானவையாக அமைந்தன'' என்றார்.

## ஐந்து பொலிசாருக்கும் பதவி உயர்வு கிடைக்கும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட ஐந்து பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கும் சார்ஜன்டுகளாக பதவி உயர்வு வழங்கவும் ஒவ்வொருவருக்கும் ஒரு லட்சம் ரூபா வீதம் சன்மானம் வழங்கவும் சிறிலங்கா பொலிஸ் தலைமைப் பீடம் முடிவுசெய்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் கோரப்பட்டிருப்பதாகவும் அனுமதி கிடைத்தவுடன் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் தலைமையக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிஒருவர்தெரிவித்தார்.

இராணுவத்தின் மிதிவெடியில்

## சிக்கிய குடும்பப் பெண் வலதுகாலை இழந்தார்

சிறிலங்கா இராணுவத்தினரின் மிதிவெடியில்சிக்கிய குடும்பப்பெண் ஒருவர் தனது வலது காலை இழந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் அச்சுவேலி பத்தைமேனித் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4-30 மணியளவில் நடைபெற்றது.

ஒரு பிள்ளையின் தாயான திருமதி சரஸ்வதி முருகமூர்த்தி (வயது 37) என்பவரே காலை இழந்து கொண்டவராவார். பத்தைமேனியிலிருந்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர் கவனத்திற்கு

(குருநகர்)

வைத்திய சிகிச்சைக்காக கொழும்புக்குச் செல்ல தெரிவு செய்யப்பட்ட நோயாளிகளும் அவர்களுடன் கூடச்செல்பவர்களும் தங்களுக்குத் தேவையான இரண்டு நாட்களுக்கு உரிய உணவு, தண்ணீர் ஆகியவற்றுடன் எதிர்வரும் புதன்கிழமை காலை 7 மணிக்கு யாழ். அரசினர் வைத்திய சாலையில் தவறாது சமுகம் அளிக்குமாறு வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுள்ளார்.

... கணிசமான அளவில் மக்களுக்கு கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிய பின்னரே கைதிகள் விடுதலை செய்யப்படுவர் என ... தடை நீங்கிய பொருள்களின் பட்டியலை ஜனாதிபதியின் தூதுவரான பிரிகேடியர் வீர ... வைத்துள்ள கைதிகளை விடுதலை செய்வார்கள் எனத் தெரியவருகின்றது.

# தடை நீக்கிய பொருள்களை விரைவில் அனுப்பிவைக்குக!

## நேற்றைய பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் வற்புறுத்து

(யாழ்ப்பாணம்]

வடபகுதி மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் தடை நீக்கப்பட்ட பொருள்களை உடன் அனுப்பிவைக்க அவசர நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது விடுதலைப்புலிகள் இயக்கம் வற்புறுத்தியது.

நேற்று மாலை விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போதே இவ்வாறு வற்புறுத்தப்பட்டன.

மாலை 5.00 மணியளவில் இருந்து 7.00 மணி வரை இடம் பெற்ற இவ் இரண்டு மணிநேர பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர், அரசின் தரப்பில் பிரிகேடியர் வீரசேகரா கலந்து கொண்டார். இப் பேச்சுவார்த்தையில் அரச அதிபரும் கலந்து கொண்டார்.

தடை நீக்கப்பட்ட பொருள்களை விரைவில் வட பகுதிக்கு எடுத்து வருவது பற்றியும், அது தொடர்பான நடைமுறைகள் பற்றியும் இடம் பெற்ற இப் பேச்சுவார்த்தையில் மேலும் தடைநீக்கப்பட்ட பொருள்களை வவுனியா ஊடாக கொண்டுவருவதில் இராணுவம் போடும் முட்டுக்கட்டைகள், கெடுபிடிகள் பற்றியும் விடுதலைப் புலிகள் இயக்கம் எடுத்து விளக்கியதோடு தரைவழியாகப் பொருள்களை கொண்டு வருவதற்கு வசதிகளைஅரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும் எனவும் பேச்சுவார்த்தையின் போது புலிகள் தரப்பினால் வற்புறுத்தப்பட்டது.

## வீரவணக்கம்



வரவேங்கை

நித்தியானந்தன்

வன்னி மாவட்டம் கிளிநொச்சியில் கடந்த 24ஆம் திகதி ஏற்பட்ட விபத்தொன்றில் வீரவேங்கை நித்தியானந்தன் (கந்தசாமி தர்மலிங்கம்- வலையால் மடம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு) எனும் விடுதலைப் புலிகள் போராளி மரணமடைந்துள்ளார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

... தொடர்ந்து வரும் இனவழி முறையின் கொடுமையினை எடுத்து நோக்கி, சிறிலங்கா அரசுக்கும் பிரச்சினையைத் ... இல்லை. ஆற்றலும் இல்லை.

இவ்வாறு ஏசியன் சேர்வே எழுதியுள்ளது.

## பிரிகேடியர் வீரசேகரா நேற்று வந்து சேர்ந்தார்

கொழும்புக்குச் சென்றிருந்த ஜனாதிபதியின் விசேட தூதுவர் பிரிகேடியர் வீரசேகரா நேற்றுக் காலை 'குமண' கப்பலில் பருத்தித்துறையை வந்தடைந்தார். இவருடன் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் வந்திருந்தார்.

இவர்கள்இருவரும் பருத்தித்துறை துறைமுகத்திற்கு சரியாக 7.30 மணிக்கு வந்தனர். இவர்களை ஏற்றிச் செல்வதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிட பிரதிநிதியும், விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் 7.15 மணிக்கு துறைமுகத்திற்கு வருகை தந்திருந்தனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வதிவிட பிரதிநிதியும், விடுதலைப் புலிகள் பிரமுகரான திரு. தங்கனும் கப்பலுக்கு சென்று பிரிகேடியரை அழைத்து வந்தனர். துறைமுகப் பகுதியில்யாழ் மாவட்ட தளபதி திரு. அன்பு, திரு. தயாநிதி மற்றும்பலரும் நின்றனர்.

யாழ்ப்பாணம் நோக்கிவந்த அரசஅதிபரையும், தூதுவரையும் துறைமுகத்திலிருந்து வாகனங்களில் ஏற்றிவந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையினர் பாதுகாப்புவழங்கியிருந்தனர்.

## ஜனாதிபதியிடம் வீரசேகரா விளக்கினார்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா ஜனாதிபதியின் விசேட தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா முன்னர் புலிகளுடன் நடாத்திய பேச்சுகள் குறித்து சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவிற்கும் கூட்டுப்படைத் தலைமையக அதிகாரிக்கும் விளக்கிக் கூறியதாகத் தெரிய வருகின்றது

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி விட்டு கடந்த 23 ஆம் திகதி இங்கிருந்து புறப்பட்ட விசேட தூதுவர் கொழும்பில் டி. பி. விஜயதுங்காவைச் சந்தித்து பேச்சுவார்த்தை விபரங்களையும் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் விளக்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

இவர்கூட்டுப்படைதலைமை அலுவலக அதிகாரிகளுக்கும் இவ்விடயங்கள் குறித்து விளக்கிக் கூறியதாகத் தெரிய வருகிறது.

# விமானத்தைக் கடத்த புலிகள் முயற்சியாம்

## விமானநிலைய பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

பயணிகள் விமானம் அல்லது பாதுகாப்புப்படை விமானத்தைப் புலிகள் கடத்துவதைத் தவிர்க்கும் வகையில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்புப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானம் ஓட்டும் பயிற்சி பெற்ற புலிகள் ஓரிருவராவது இருக்கவேண்டும் என்று பாதுகாப்புப்படை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். புலிகள் தரப்பில் விமானி ஒருவரைத் தாம் அடையாளம் கண்டுள்ளதாகவும், இது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையம் மற்றும் இரத்மலானை விமானநிலைய அதிகாரிகள்வரப்போகும் அபாயம்குறித்துஎச்சரிக்கையாகஇருப்பதாகவும் கூறப்படுகிறது.

புலிகளின் அச்சுறுத்தலைச் சமாளிக்கக் கூடிய விசேட பிரிவொன்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் செயற்படுவதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விமானங்கள்மீது புலிகள் தாக்குதல் நடத்தும் பட்சத்தில் அதனை எதிர்த்து முறியடிக்கக் கூடிய பயிற்சி இந்தப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளதாம். புலிகளின் தாக்குதலை முறியடிக்கப்பலமுறைகட்டுநாயக்கா விமான நிலையத்தில்ஒத்திகை பார்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் 1984இல் ஏயர் லங்கா பயணிகள் விமானம் ஒன்றை வெடிவைத்துத் தகர்த்ததையும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

## ருகுணு கப்பல் புறப்படுவதில் தாமதம்

தடைநீக்கப்பட்ட அத்தியாவசியப் பொருள்களை வடபகுதிக்கு ஏற்றிவரும் கப்பல் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

தடைநீக்கப்பட்ட பொருள்களின் ஒரு தொகுதியை ஏற்றிய ''ருகுணு'' என்ற கப்பல் இன்றையதினமே கொழும்பு துறைமுகத்தில் இருந்து புறப்படவுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

இக் கப்பல தடைநீக்கப்பட்ட பொருள்களை ஏற்றிக் கொண்டு கடந்த வியாழக்கிழமை புறப்பட்டதாக ரூபவாஹினி செய்தி வெளியிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இக் கப்பல் இன்று மாலையே புறப்படவுள்ளதாக இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

# புலிகள் - இராணுவம் இயக்கச்சியில் மோதல்

[தென்மராட்சி]

இயக்கச்சிப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் நண்பகல் கடும் சண்டை இடம்பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இருபகுதியினருக்கும் இடையில் சுமார் அரைமணி நேரம் கடும்சண்டை இடம்பெற்றதாகவும், இச்சண்டையின் போது துப்பாக்கிப் பிரயோகம், எறிகணைவீச்சுகள் ஆகியன இடம் பெற்றதாகவும் தெரியவருகின்றது.

இம்மோதலின்போது இராணுவத் தரப்பில் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இயக்கச்சிப் பகுதியில் மக்கள் குடியிருப்புகள்மீது இராணுவத்தால் கடும் எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (86)

## அல்லிப்பளைப் பகுதியில் சடலம் கரை ஒதுங்கியது

கடந்த புதன்கிழமை அன்று காலை அல்லிப்பளை கடல் கரையில் அழுகிய நிலையில் ஓர் ஆணின் சடலம் கரை ஒதுங்கியது. பின்னர் பளை காவல் துறையினர் அச்சடலத்தை எடுத்து வந்த வேளை இறந்தவர் ச. அற்புதராசா (வயது 55) புலோலி வடகிழக்கு, மருதடி, பருத்தித்துறை என இறந்தவரது உறவினரால் இனம் காணப்பட்டது.

இவர் கடந்த 21ஆம் திகதி இரவு ஆலங்கேணிப் பகுதியில் இருந்து கிளாலி கரையை நோக்கி பொருள்கள் ஏற்றி வந்த படகில் வந்ததாகவும் அவ்வேளை இவரது படகை இழுத்துச் சென்ற படகுக்கும் இவர் சென்ற படகிற்கும் இடையிலான கயிறு அறுந்ததாகவும் உடன் இவர் மற்றைய படகில் ஏற முயற்சித்த போது தவறுதலாகக் கடலில் விழுந்ததாகவும் இவரைத் தேடிய பின்னர் படகு மூலம் சென்றும் காணாது திரும்பியதாக இவரின் படகை இழுத்துச் சென்ற படகில் இருந்து வந்த இவரின் உறவினர்கள் பளை காவல்துறைக்கு முறைப்பாடு செய்திருந்தனர். (68)

## வரி விளம்பரம்

### திருத்திக் கொடுக்கப்படும்

தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரம் பிரதி பண்ணும் இயந்திரம் சிறந்த தொழில் நுட்ப வல்லுநர்களால் குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும் றொச்வூட் G R மாநகலிங்கம் 8/1, E அம்மன் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். (5210)

### ஹோட்டல் ஞானம்ஸ்

புதிய மெருகுடன் உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகள் தங்குவதற்கும், தரமான சுவையான உணவுபார்சல்கள், (முன் கூட்டியே ஓடருக்கும்) மற்றும் குளிர்பானம், மது பானம் அருந்துவதற்கும் திருமண வைபவங்கள், விருந்துபசாரங்கள் எதுவானாலும் உங்களை வரவேற்கின்றது-ஹோட்டல் ஞானம்ஸ் (சி/6877)

### கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அனுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து, பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி (சி-6849)

### விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஆலங்கட்டை றோட் கொள்ளாவத்தை பொலிகண்டி கற்கண்டுமாமா சைக்கிள்கடை, பொலிகண்டி. (5220)

### உணவுப் பார்சல்கள்

ஜோ. எகட்டனின் ஜெசித்தாராவின் உணவுப்பார்சலகள் முற்பகல் 11 30 மணி முதல் 3.00மணி வரை பெற்றுக் கொள்ளலாம். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி: செந்தாமரை 7 குமாரசாமி வீதி, பல்கலைக் கழக முன்வீதி, கந்தர்மடம் ஆகியஇடங்களிலுபெற்றுக் கொள்வலாம். (சி-6898

### விளையாட்டு

மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் சிறி பாஸ்கரன் விளையாட்டரங்கம்,


# இராணுவ சீருடையில் வந்து வர்த்தகரிடம் கொள்ளை

(கொழும்பு)

இராணுவ சீருடையில் வந்த மூவர் கடை ஒன்றினுள் நுழைந்து சத்தமிட்டு ஊரைக் கூட்ட முயன்ற வர்த்தகரின் வாயை வெட்டிவிட்டு, 65ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களையும், பணத்தையும் கொள்ளையிட்டு தப்பிச் சென்ற சம்பவம் கடவத்தை ரன்முத்துகல என்னும் இடத்தில் நடைபெற்று உள்ளது.


## யாழ். மத்தியில் ஊடுருவல்...

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா

வாடிக்கையாளரின் நலன்கருதி

408. ஆஸ்பத்திரி வீதி,

சண்டோஸ் மதுபானச்சாலையில்

(பழைய பஸ் நிலைய முன்பாக)

எமது தரமான, சுவையான, உணவுப் பார்சல்களை

28ஆம் திகதி ஆனி 1993 முதல்

காலை 11-45 முதல் பி. ப. 3-30 மணிவரை வழங்கவுள்ளோம்

என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.

மரக்கறி ரூபா 25/-

மீன்/இறைச்சி ரூபா 30/-

ஜோ. எகட்டனின் **ஜெசித்தாரா**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி.

ஜெசித்தாரா புதுயுகத்தில் ஓர் புது உருவம்

(சி-6897) விளம்பர வடிவமைப்பு செனித்

## கொழும்பு ஸ்ருடியோ

நினைவஞ்சலி, சரமகவிக்குத் தேவையான (BLOCKS) - பழைய படங்களிலிருந்து-அந்தியேட்டிக்குத் தேவையான புகைப்படங்கள், உறுதியான றபர்சில்-ஸ்ரிக்கேஸ் தேவைப்படும்போது எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**கொழும்பு ஸ்ருடியோ**

55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி/6748)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



# குமணவில்பயணிகளுக்கான வசதிகள் போதாதாம்

(யாழ்ப்பாணம்)

நோயாளர்களையும், உத்தியோகத்தர்களையும் பருத்தித்துறையிலிருந்து ஏற்றிச் செல்லும் குமண கப்பலில் பலவசதியீனங்கள் இருப்பதனாலேயே க்கப்பலில் செல்வோர் திருக்கோணமலையில் இறக்கப்படுகின்றார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து கப்பல் மூலம் கொழும்பு செல்வதானால் மூன்று நாட்கள் தேவைப்படும். இதற்கு தேவையான கழிப்பிட வசதிகளும் ஏனைய அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் வசதிகளும் கப்பலில் இல்லாமையினாலேயே பயணிகள் திருக்கோணமலையில் இறக்கிவிடப்படுகின்றனர் என்றும், குமண கப்பல் சரக்குப் போக்குவரத்திற்கான கப்பல்தான் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் கூறின.

# கைதாவோர் தொடர்பாக இராணுவம் புதிய நடைமுறை

சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக ஒருவர் கைது செய்யப்பட்டால் அவரைக் கைது செய்ததற்கான உறுதிக் கடிதமொன்றை உறவினர்களிடம் கையளிக்கும் நடைமுறையொன்றை இராணுவத்தினர் மட்டக்களப்பில் கையாளத் தொடங்கியுள்ளனர்.

விசாரணைக்காக இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு உடனடியாக விடுவிக்கப்படுவோர் தவிர தடுத்து வைக்கப்படும் ஏனையோரின் குடும்பத்தினருக்கு இச்சீட்டு வழங்கப்படும்.

கைதானவரின் பெயர், விலாசம், அடையாள அட்டை போன்ற விபரங்களை அந்த உறுதிப்பத்திரத்தில் நிரப்பப்பட்டு முகாம் பொறுப்பதிகாரியின் கையொப்பம் இட்டு மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டு இது வழங்கப்படும்

### கூட்டம்

6ஆம் மாதங்களில் (ஜூன் மாதம்) வீரச்சாவடைந்த தீவகக் கோட்டத்திற்குட்பட்ட ஐந்து மாவீரர்களுக்கான வீர வணக்கக் கூட்டம் நாளை திங்கட்கிழமை இரவு 8-00 மணிக்கு கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் நடைபெறும்.

தீவக அரசியல்துறை பொறுப்பாளர் திரு செம்மணன் அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ் வீரவணக்கக் கூட்டத்தில், விடுதலைப் புலிகள் உறுப்பினர்களின் நினைவுப் பேருரைகளும் இதனைத் தொடர்ந்து தீவக கலை பண்பாட்டுக் குழுவினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (90)


திருமறைக் கலாமன்றத்தின்

## "இலக்கிய விழா"

ஞாயிறு 27-6-93 - மாலை 5.30

நிகழ்ச்சி நிரல்

மங்கள இசை: ஈழநல்லூர் பிச்சையப்பா குழுவினர்

வரவேற்பு நடனம: கவின் கலைகள் பயிலகம் (தி. ம. க. ம.)

தலைமையுரை: பேராசிரியர் நீ.மரிய சேவியர் அடிகள் (இயக்குனர்)

கவியின்பம்:

வாகரை வாணன் (நெஞ்சு பொறுக்குதில்லையே)

திரு. சோ. பத்மநாதன் B A.(Hons) (வடக்கிருத்தல்)

கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை (என்று தணியும்)

சிறப்பு நிகழ்ச்சி:

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களை பாராட்டி பொன்னாடை போர்த்தல்

கருத்தரங்கு:

தலைவர். பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள்

உரை:- கலாநிதி A J.V சந்திரகாந்தன் அடிகள்

கலாநிதி சோ. கிருஷ்ணராஜா அவர்கள்

நயவுரை:- பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள்

நடன, நாடகம்:


தொழில் நுட்பக் கல்லூரிப் பரீட்சை

# வினாத்தாள்கள் கப்பல்மூலம் கொண்டு வரப்பட்டன

(யாழ்ப்பாணம்)

தொழில் நுட்பக்கல்லூரி ஆண்டிறுதிப் பரீட்சை 1992 இற்கான மூன்று கல்வித் துறைகளுக்குரிய வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டு யாழ். கல்வித்திணைக்களத்தால் கொண்டுவரப்பட்டுள்ளன

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா வர்த்தகம் ஆண்டிறுதிப்பரீட்சை - 4ஆம் ஆண்டிற்குரியது உயர் தேசிய வர்த்தகமும் நிதியும் டிப்ளோமா 2ஆம் ஆண்டு, உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (புதிய பாடத்திட்டம்) 3ஆம் ஆண்டிற்குரியது. ஆகியவற்றின் வினாத்தாள்களேஎடுத்துவரப்பட்டவையாகும்.

மேற்படி பரீட்சைகள் நாளை தொடக்கம் அடுத்த மாதம் 14ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன. மேலும் இவைசம்பந்தமான மேலதிக விபரங்களை தொழில் நுட்பக்கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம். (பா)

### புதிய பங்கீட்டு அட்டை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்குரிய புதிய பங்கீட்டு அட்டைகள் தற்போது அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க தலைமைக் காரியாலயத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. பாவனையாளர்கள் தமது குடும்ப அட்டை, நிவாரண முத்திரை என்பவற்றைச் சமர்ப்பித்து பதிவு செய்தபின் ஐந்து ரூபா செலுத்தி தமக்குரிய புதிய பங்கீட்டு அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம். (22)


## நினைவு கூருகின்றோம் ... 1993-06-27

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு-புலிபாய்ந்தகல் பகுதியில் இருந்து எமது முகாமொன்றின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது வீரச்சாவெய்திய.

**கப்டன் ஜிம்கெலி** (சின்னப்பிள்ளை நடராசா-கிரான்-மட்டு)

**லெப்,மொட்டைக்கஜன்** (அழகரத்தினம் மணிவண்ணன்-கல்லடித்தெரு-மட்டு)

**கங்கா** (நாகலிங்கம் கங்காதரன்-குமாரவீதி,கிரான்-மட்டு)

**குமார்** (வில்லியம் அருள்நாதன்-ஏறாவூர்-மட்டு)

**லோகேஸ்** (நல்லரத்தினம் லோகேந்திரராஜா-மூறக்கொட்டாஞ்சேனை-மட்டு)

**ரவி** (பொன்னையா தர்மராஜா-கறுவாக்கேணி, வாழைச்சேனை-மட்டு)

**சைமன்** (மயில்வாகனம் மாதவன்-கிரான்-மட்டு)

**சிந்து** (சித்திரவேல் ஜெயராசா-கிரான்-மட்டு)

**சரவணை** (பிள்ளையான் சவுந்தரராஜன்-கிரான்-மட்டு)

**றொசான்** (ஐயாத்துரை அமிர்தநாதன்-மயிலியதனை, தொண்டமானாறு-யாழ்)

1988ஆம் ஆண்டு மணலாறு - நித்திகைக்குளத்தில் எதிர்பாராதவிதமாகஎமதுமிதிவெடியில்சிக்கியதில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கப்டன் சபேசன்** (பேரம்பலம் கிருஷ்ணபிள்ளை-புலோலி தெற்கு, புலோலி, பருத்தித்துறை-யாழ்)

1989ஆம் ஆண்டு தமிழகம் - தஞ்சாவூரில் தமிழ் காவல்துறையினர் கைது செய்ய முயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப் போசன்** (பஞ்சலிங்கம் சிவகுமாரன்-கோயிலடி, மூகத்துவாரம்-மட்டு)

மணலாறு-நாயாற்றுப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**மதன்** (வேலுப்பிள்ளை இராஜேந்திரன்-செல்வநகர்-கிளிநொச்சி)

**லெப்.யோக்கின்** (செந்திவேல் சக்திவேல்-காளிகோவிலடி-வல்வெட்டித்துறை)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஆலங்கட்டை றோட் கொளளா வத்தை பொலிகண்டி கற்கண்டுமாமா சைக்கிள்கடை, பொலிகண்டி.
(5220)

## உணவுப் பார்சல்கள்

ஜோ. எகட்டனின் ஜெசித் தாராவின் உணவுப்பார்சல்கள் முற்பகல் 11 30 மணி முதல் 3.00மணி வரை பெற்றுக் கொள்ளலாம். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி: செந்தாமரை 7 குமாரசாமி வீதி, பல்கலைக் கழக முன்வீதி, கந்தர்மடம் ஆகியஇடங்களிலும்பெற்றுக் கொள்ளலாம். (சி-6898

## விளையாட்டு

மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் சிறி பாஸ்கரன் விளையாட்டரங்கம், இன்று ஞாயிறு காலையில் திறந்து வைக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு இன்று காலை எட்டு மணிமுதல் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழக கிரகெட் அணிக்கும், யாழ். சென்றலைடஸ் கிரிக்கெட் அணிக்கும் இடையே சிநேக பூர்வமான 50ஓவர் கிரிக்கெட் போட்டியும் இடம் பெறவுள்ளது.

★

அரியாலை, கலைவாணி சனசமூக நிலையத்தின் 29 ஆவது ஆண்டு விழாவும் சந்தோசம் இளைஞர் மன்றத்தின் வருடாந்த விளையாட்டு விழாவும் இன்று நடைபெறவுள்ளன.

இளைஞர் மன்ற விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ள மேற்படி விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

பிரதம, சிறப்பு விருந்தினர்களாக மாவீரர்களான லெப். கேணல் சந்தோஷம், கப்டன் சண்முகம் ஆகியோரின் பெற்றோர்களும் அரியாலை பிரதேசப் பொறுப்பாளர் பா. மாவியும் கலந்து கொள்வார்கள்.

★

நாவற்குழி லவனிதா குடியிருப்பின் 2 ஆவது ஆண்டு நிறைவையொட்டி குடியிருப்பில் இயங்கிவரும் 'மாவீரர் நற்பணிமன்ற விளையாட்டுக் குழுவினரால்' யாழ். மாவட்ட ரீதியாக உதைபந்தாட்ட, கரபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நடாத்தப்பட இருக்கிறன

அடுத்தமாத நடுப்பகுதி அளவில் நடாத்தப்படவிருக்கும் மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் பிரஸ்தாப விளையாட்டுக் குழுவினருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றது.

---

புகைப்படங்கள், உறுதியான றபர்சீல்-ஸ்ரிக்கேஸ் தேவைப்படும்போது எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

## கொழும்பு ஸ்ருடியோ

55, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/6748)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். சந்திரபவான் (அலோசியஸ்)

(சுந்தரலிங்கம் மோகனதாஸ்: நவரத்தினத்தின் பேரன்)
பழைய மாணவன்-தொண்டைமானாறு மகாவித்தியாலயம்

ஜனனம் 08-08-1974 — வீரச்சாவு 08-07-1992

திதி: 28-06-1993

தொண்டை மானாறு தந்தவெம் புதல்வா
தண்ணொளி வீசிய சந்திர பவானே
கண்ணின் மணியாய் காத்து நின்ற தமிழ்
மண்ணை விட்டுப் பிரிந்தனையோ

தாங்கிய ஆயுதம் தக்கபடி தான் கொண்டு
சிங்கள அரசை சீர் குலைத்த அலோசியசே
எங்கள் மண்ணில் எதிரி படையைப் பின்
வாங்கச் செய்த மாவீரா மாண்டனையோ

என்று தணியும் இந்த சுதந்திர தாகமென
அன்று கொண்ட வீரனே மோகனதாசே
உன் பெயர்கள் எம் மனதில் நினைவாகி
இன்று வடிந்திடும் எம் கண்ணீர் அஞ்சலிகள்.

நாளை 28-06-93 அன்று அன்னாரின் வீட்டில் நடைபெறும் மதிய போசனத்தில் இயக்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், சகமாணவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவருடன் வீரச்சாவடைந்த வேங்கைகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்

தாய், சகோதர சகோதரிகள்
பேரன், உற்றார், உறவினர்கள்.

கொத்தியகாடு,
தொண்டைமானாறு.
(5218)

---

மங்கள இசை: சுழிநல்லூர் பிச்சையப்பா குழுவினர்
வரவேற்பு நடனம: கவின் கலைகள் பயிலகம்
(தி. ம. க. ம.)

தலைமையுரை: பேராசிரியர் நீ.மரிய சேவியர் அடிகள்
(இயக்குனர்)

**கவியின்பம்:**

வாகரை வாணன் (நெஞ்சு பொறுக்குதில்லையே)
திரு. சோ. பத்மநாதன் B A.(Hons)
(வடக்கிருத்தல்)
கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை
(என்று தணியும்)

**சிறப்பு நிகழ்ச்சி:**

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களை பாராட்டி பொன்னாடை போர்த்தல்

**கருத்தரங்கு:**

தலைவர். பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள்
உரை:- கலாநிதி A J.V சந்திரகாந்தன் அடிகள்
கலாநிதி சோ. கிருஷ்ணராஜா அவர்கள்
நயவுரை:- பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள்

**நடன, நாடகம்:**

## "இலங்கையர் கோன் விலங்கு"

(கவின் கலைகள் பயிலகம் தி. ம. க. ம.)

அன்பளிப்பு: யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(சி-6902)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1993 - 07 - 28 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

தற்காலிக போதனாசிரியர் ( கணனிப்பகுதி )

சம்பள அளவுத்திட்டம்:

தற்காலிக போதனாசிரியர் ( கணனிப் பகுதி )

1993 - 12 - 31-ம் திகதி வரை ரூபா 3,737.50 (நிலையானது) மாதமொன்றிற்கு

1994-01 01இல் இருந்து ரூபா 4,225/- (நிலையானது) மாதமொன்றிற்கு

பரீட்சை பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போருக்கு அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை ரூபா 3,540/- (நிலையானது) மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்).

தகைமைகள்

பட்டதாரி அல்லது பட்ட இறுதித் தேர்வுக்குத் தோற்றிப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழக தாபனக் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் கந்தோரில் இருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். படிவங்களையும் ஏனைய விபரங்களையும் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 20/- காசுக்கட்டளை/ தபாற்கட்டளையை 23x10 ச மீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும் விதிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களினூடாக விண்ணப்பித்தல்வேண்டும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பணம்.
1993. 06 24 [சி-6905]

---

(சேமமடு-மட்டு)

**சைமன்** (மயில்வாகனம் மாதவன்-கிரான்-மட்டு)
**சிந்து** (சித்திரவேல் ஜெயராசா-கிரான்-மட்டு)
**சரவணை** (பிள்ளையான் சவுந்தரராஜன்-கிரான்-மட்டு)
**றொசான்** (ஐயாத்துரை அமிர்தநாதன்-மயிலியதனை, தொண்டமானாறு-யாழ்)

1988ஆம் ஆண்டு மணலாறு - நித்திகைக்குளத்தில் எதிர்பாராதவிதமாகஎமதுமிதிவெடியில்சிக்கியதில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கப்டன் சபேசன்** (பேரம்பலம் கிருஷ்ணபிள்ளை-புலோலி தெற்கு, புலோலி, பருத்தித்துறை-யாழ்)

1989ஆம் ஆண்டு தமிழகம் - தஞ்சாவூரில் தமிழ் காவல்துறையினர் கைது செய்ய முயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப் போசன்** (பஞ்சலிங்கம் சிவகுமாரன்-கோயிலடி, மூகத்துவாரம்-மட்டு)

மணலாறு-நாயாற்றுப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**மதன்** (வேலுப்பிள்ளை இராஜேந்திரன்-செல்வநகர்-கிளிநொச்சி)

**லெப்.யோக்கின்** (செந்திவேல் சக்திவேல்-காளிகோவிலடி-வல்வெட்டித்துறை)

1990ஆம் ஆண்டு அம்பாறை - அறுகம்பை முகாமில் சிறிலங்காப்படையினரால் ரயர் போட்டு எரித்துக்கொல்லப்பட்ட 04 தமிழர்கள், தாண்டியடிப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 05 தமிழிளைஞர்கள்.

மட்டு - கோப்பாவெளி 3-ம்கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

மருதங்கேணியில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

யாழ் - நல்லூர்ப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 05 தமிழர்கள். சுன்னாகத்தில் உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட ஓவியக் கலைஞர்.

1991ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட பெரியபுல்லுமலையைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1992ஆம் ஆண்டு வவுனியா - சூடுவெந்த புலவில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

**லெப். ரகு** (பெரியதம்பி குகதாஸ் - கனகராயன்குளம்-வவுனியா)
**2-ம் லெப். புகழேந்தி** (நாகராசா மோகனராசா -வாரிக்குட்டியூர் - வவுனியா)
**2-ம் லெப். மகேந்திரன்** (பூலோகசிங்கம் பத்மலோஜன் - சேமமடு, ஓமந்தை - வவுனியா)
**லெப். சிலம்பரசன் றம்போ** (பரமானந்தம் தயாளன் - 97, தெய்வேந்திரராசா வீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி)

தமிழீழக் கடற்பரப்பில் (தாளையடி) 28 02.1992 அன்று சிறிலங்காக் கடற்படையினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்து சிகிச்சையின் போது மந்திகை மருத்துவமனையில் வீரச்சாவெய்திய-

**கப்டன் ஆதித்தன்** (குகநாதன் கேதீஸ்வரன் - காட்டுப்புலம் தொண்டமானாறு - யாழ்)

மட்டு – கொக்கட்டிச்சோலை - வவுணைத்தீவு, 19-ம் கட்டை உன்னிச்சை முகாமிலிருந்து பெரும் எண்ணிக்கையில் வெளியேறிய சிறிலங்கா இராணுவம், நெல்லிக்காடு, பாலமபோட்டமடு, சாமான்டியாறு, தாண்டாமலை பகுதிகளில் கடும் துப்பாக்கிச் சூட்டிலும், வெட்டியும் கொல்லப்பட்ட 20 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6899)

### சிந்தனைக்கு

கனியில் சிறந்ததை விரும்புபவன்
கட்டாயம் மரமேறித்தான் ஆகவேண்டும்
-ஆதி அமெரிக்கர் பழமொழி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-06-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## பழிகளை ஏற்கும் பிரேமாவின் சமாதி

"செல்லும் செல்லாததிற் கெல்லாம் செட்டியார் இருக்கின்றார்" என்பதுபோல் இன்று சிறிலங்காவைப் பொறுத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த கால சகல தவறுகளையும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா ஏற்றுக் கொள்கின்றார். பிரேமதாசாவின் மறைவிற்குப் பின் சிறிலங்காவில் நடைபெறும் நிகழ்வுகள் இதனையே வெளிக்காட்டுவதாகவுள்ளன.

இதில் குறிப்பிடத்தக்க முக்கியமானதொன்று முன்னாள் டி. ஐ. ஜி. உடுகம்பொல கொழும்பு திரும்பியுள்ளமையாகும். இவர் ஒரு கொலை வழக்கு தொடர்பாக கோட்டில் ஆஜராக மறுத்ததோடு அரசாங்கத்தின் மீது மக்களுக்கு அதிருப்தியையும் வெறுப்பையும் ஏற்படுத்தும் வகையில் அறிக்கைகள் வெளியிட்டார் என அவசரகால சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருந்தார். இது தொடர்பாக உடுகம்பொல மீது பிடிவிறாந்தும் பிறப்பித்திருந்தது. இதை தொடர்ந்து தலைமறைவான, முன்னாள் டி ஐ ஜி. தற்பொழுது பிரேமதாசா இல்லை என்ற முறையில் நாடு திரும்பியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா உயிருடன் இருந்த போதே அவர் பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களின் படுகொலைக்குக் காரணமாக இருந்தவர் என்ற குற்றச்சாட்டு இருந்தது. இதேபோல், முன்னாள் டி. ஐ ஜி உடுகம்பொல பதவியில் இருந்த போது இரக்கமின்றி பல சிங்கள இளைஞர்களைப் படுகொலை செய்ததாக இவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டது. அதாவது, ஒரு காலத்தில் இவ் இருவரையும் கண்டு சிங்கள மக்கள் அஞ்சி நடுங்கினர் என்று கூறுவதில் தப்பில்லை. அதேவேளை படுகொலைகளில் பங்காளிகளாகவும் இருந்தனர்.

ஆனால், சட்டத்தரணி லியன ஆராச்சியின் கொலைவழக்கில் உடுகம்பொலவின் பெயர் முக்கியமானதாக அடிப்பட்டவேளையில் ஜனாதிபதி பிரேமதாசா அவரைப் பாதுகாக்க முற்படவில்லை என்பதோடு, டி. ஐ ஜி உடுகம்பொலவின் சகோதரன் மேஜர் உடுகம்பொலவை தங்கக் கடத்தல்கள் விவகாரம் தொடர்பாக கைது செய்தபோது, இருவருக்கும் இடையில் முறுகல் நிலை வலுவடைந்தது.

இந்நிலையில், டி ஐ ஜி. உடுகம்பொல தலைமறைவாகியதோடு, ஜனாதிபதி பிரேமதாசாவின்

### மட்டக்களப்பு வைத்திய சாலையில்

# அறுவைச் சிகிச்சை செய்த 4 இளம் தாய்மார் மரணம்

(கொழும்பு)

ஒருவார காலத்தினுள் மட்டக்களப்பு மாகாண வைத்திய சாலையில் பிரசவத்திற்கென அனுமதிக்கப்பட்ட நான்கு கர்ப்பிணிப் பெண்கள் அகால மரணமடைந்தது தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தைகளை பிரசவித்த நான்கு இளம் தாய்மார்கள் கடந்த ஒரு வாரத்தில் மரணம் அடைந்துள்ளனர். இதனால் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் மத்தியில் பலத்தபீதியும், மாவட்ட வைத்தியசாலை மீது அவநம்பிக்கையும் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அத்துடன் மட்டக்களப்பு வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவிலும், வார்ட்டுகளிலும் உள்ள நோயாளிகளைக் கொண்டு செல்லும் வண்டிகளில் இரத்தம் தோய்ந்த றெக்சின் துணிகளே காணப்படுவதாகவும். இதனால் நோயாளிகளுக்கு தொற்றுநோய் ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

## புத்தர் சிலைகளை சிதைத்து புதையல் எடுத்தனர்

### 2பிக்குகள் உட்பட 21பேர் கைது

(கொழும்பு)

பழமை வாய்ந்த பௌத்த விகாரைகளில் புதையல் எடுப்பதற்காக புத்தர் சிலைகளை சிதைத்துத் தோண்டிய இரு பௌத்த பிக்குகள் உட்பட இருபத்தொரு பேரை அம்பன்பொல பொலிசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் நகைமாளிகையின் சொந்தக்காரர் இருவர், ஒரு வைத்தியர், வடபகுதிக்கு பொருள்களை விநியோகிக்கும் தமிழ் வர்த்தகர் ஒருவர், இரத்தினக்கல் வியாபாரிகள் முதலானோரும் அடங்குவர். இவர்களைத் தவிர மேலும் 75 பேர் இ சம்பந்தமாக பொலிசாரால் தேடப்பட்டு வருகின்றனர்.

பதினொரு விகாரைகளிலிருந்து திருடப்பட்ட வெள்ளி உலோகப் பொருள்கள், வெள்ளியினால் செய்யப்பட்ட 15 புத்தர் சிலைகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

## கொழும்புநகர்சுற்றிவளைப்பு 28 பேர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

ஆமர் வீதி தொடர்மாடி, மெசன்ஜர் வீதி, ஹுசைனியா வீதி, பாபர் வீதி ஆகிய பகுதிகளில் சுற்றி வளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொலிசார் 23ஆண்களையும், 5 பெண்களையும் கைதுசெய்துள்ளனர்.

கடந்த திங்களன்று அதிகாலையில் மேற்கொள்ளப்பட்ட இத் தேடுதலைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்களில் வெளிநாடுகளுக்கு செல்வதற்காக கொழும்புக்கு சென்றுதங்கியிருந்த சிலரும் இருப்பதாகக் கூறப்படுகிறன்து.

### சட்டவிரோத கொலை தொடர்பான

## விசாரணைக்கு கோரிக்கை எதிர்க் கட்சிகள் மீளாய்வு

சட்டத்திற்கு புறம்பான வகையில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பாக முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல வெளியிட்ட சத்தியக் கடதாசியின் அடிப்படையில் விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்ககோரிய எதிர்க்கட்சிகளின் நிலை தொடர்பாக ஆராய்வதற்காக எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூடி ஆராயவுள்ளனர்.

எதிர்க்கட்சிகளோடு நெருங்கிய வட்டாரங்களின் கருத்துப்படி பிரேமதாசா உடுகம்பொலவின் வருகையின் பின்னர் இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நியாயமான விசாரணை நடத்தப்படக் கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

### ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக

## ஜே. வி. பியின் முன்பாக ராவ்

## கொழும்பில் தங்கியிருக்க மலையக இளைஞர் அச்சம்

(கொழும்பு)

தலைநகரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதையடுத்து அங்கிருக்க அஞ்சி தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதாக தெரிய வருகின்றது.

அடையாள அட்டை இல்லாத நிலையில் கொழும்பில் இருக்க முடியாததால் பல மலையக இளைஞர்கள் தமது வீடு நோக்கிச் செல்கின்றனர். அதனால் அடையாள அட்டை இல்லாத மலையகத்தவர்களை வேறு ஆவணங்களைக் கொண்டேனும் இனம் காணக்கூடிய திட்டத்தை அரசு அமுல் படுத்த வேண்டும்.

மலையக இளைஞர்களைப் பொறுத்து அவர்களின் பெற்றோர்கள் வசிக்கும் தோட்டத்திற் கூடாக அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கின்றனர். கொழும்பில் தொழில் செய்வதால் அங்கு விண்ணப்பித்தால் பிறந்த இடத்தில் போய் பெற்றுக் கொள்ளுமாறும், கோரப்படுகின்றனர். இந் நிலையில் அவர்கள் எங்கு போய் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதென்பது தெரிய வில்லை.

மலையக மக்கள் இந்நாட்டு பிரஜைகள் என ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் அவர்கள் சுதந்திரமாக நடமாட முடியாமலும் இலகுவாக அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதும் அவர்கள் மனதில் விரக்தியையே உருவாக்கும் என்றும் மலையக மக்கள் சார்பில் சுட்டிக் காட்டப் படுகின்றது.

## ஐ. தே. க. செயற்குழு ஜூலை 6இல் கூடுகிறது

ஐ.தே.கவின் அடுத்தசெயற்குழுக்கூட்டம் எதிர்வரும் ஜூலை ஆறாம் திகதியன்று கொழும்பு சிறிகோத்தாவில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகள்மற்றும், அரசியல்நிலை, கட்சி விவகாரங்கள் என்பன தொடர்பாக ஆராயப்படவிருப்பதாகக் கூறப்படுகின்றது.

பிரேமதாசாகொலையுண்ட பின்னர் நடக்கும் இரண்டாவது செயற்குழு கூட்டம் இது என்பதும், இக்கூட்டத்திற்கு முன்பாக கட்சிக்கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட்ட சிலருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

### தெரிவாகிய சந்திரசேகரனை

## ம. மா. சபைக்கு வரச் செய்ய சட்டரீதியாக முயற்சி

### - மலையக மக்கள் முன்னணி தெரிவிப்பு

[கொழும்பு]

சத்தியப் பிரமாணம் எடுப்பதற்கும், கூட்டங்களில் பங்கு பற்றுவதற்கும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரனுக்குள்ள அடிப்படை உரிமை மறுக்கப்படுமாயின் அதற்கு அவர் சட்டரீதியான சகல முயற்சிகளிலும் ஈடுபடுவார் என்று முன்னணியின் பேச்சாளரான ஏ லோரன்ஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தடுத்து வைப்பது சட்ட விரோதம் என்று உயர் நீதி மன்றம் தீர்ப்புக் கூறி, செலவுத் தொகை வழங்கப்பட்ட பின்னரும் அவர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பது ஜனநாயகத்தையும் தேர்தலில் வாக்களித்த மக்களையும் அலட்சியம் செய்வதாகவுள்ளது என்று தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சே இதற்கு முழுப் பொறுப்பாக இருக்கும்போது அவைத்தலைவர் சட்டமா அதிபருடன் பேசுவதில் எந்த பிரயோசனமும் இல்லை. இது தொடர்பாக அரசின் நடவடிக்கையை அவதானித்து வருகின்றோம்.

மேலும் தடுத்து வைக்கப்பட்டநிலையில் அவர்மாகாண சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வது அவரின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு உத்தரவாதம் அளிக்காது எனவே தான் சந்திரசேகரனை பிணையில் விடக் கோருகின்றோம் என்றும் தெரிவித்தார்.

## கல்வித்துறைக்கு ஒதுக்கீடு இல்லை

(கொழும்பு)

உலகில் 43 பேருக்கு ஒரு இராணுவ சிப்பாய் உள்ளான். 1030 பேருக்கு ஒரு வைத்தியர் என்ற விகிதத்தில் காணப்படுகிறது. ஆனால் உலகில் 90 கோடி மக்கள் எழுத்தறிவு இன்றி உள்ளனர். இவ்வாறு சர்வதேசகல்வியகத்தின் தலைவரான அமெரிக்க ஆசிரியர் சங்கத்தலைவரான திருமதி மேரிபியூற்றல் தெரிவித்தார்.

உலக நாடுகளில் அரசுகள் இராணுவச்சேவைக்கு நிதியை ஒதுக்கிவிட்டு அடிப்படைத் தேவையான கல்வித்துறையை தனியார்மயப் படுத்துகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சிங்கள ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் இருக்கும் தமிழ்மொழிமூல பாடசாலைகள் ஒவ்வொன்றிற்கும், சிங்களம் போதிக்கும் ஆசிரியர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு உள்ளார். இவ்வாறு அம்பாறை மாவட்ட கல்விப் பணிப்பாளர் வில்பேட் பெரேரா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; அத்துலத்முதலி கல்வி அமைச்சராக இருந்தபோது தாம் அம்பாறை மாவட்டக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார் எனவும், ஆசிரியப் பற்றாக்குறையை போக்கும் முகமாகவே சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டனர் எனவும் கூறியுள்ளார்.

## முகாம்களிலுள்ள அகதிகள் தொடர்பான

யுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா உயிருடன் இருந்த போதே அவர் பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களின் படுகொலைக்குக் காரணமாக இருந்தவர் என்ற குற்றச்சாட்டு இருந்தது. இதேபோல், முன்னாள் டி.ஐ.ஜி உடுகம்பொல பதவியில் இருந்த போது ஈவிரக்கமின்றி பல சிங்கள இளைஞர்களைப் படுகொலை செய்ததாக இவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டது. அதாவது, ஒரு காலத்தில் இவ் இருவரையும் கண்டு சிங்கள மக்கள் அஞ்சி நடுங்கினர் என்று கூறுவதில் தப்பில்லை. அதேவேளை படுகொலைகளில் பங்காளிகளாகவும் இருந்தனர்.

ஆனால், சட்டத்தரணி லியன ஆராச்சியின் கொலைவழக்கில் உடுகம்பொலவின் பெயர் முக்கியமானதாகஅடிப்பட்டவேளையில் ஜனாதிபதி பிரேமதாசா அவரைப் பாதுகாக்க முற்படவில்லை என்பதோடு, டி.ஐ.ஜி உடுகம்பொலவின் சகோதரன் மேஜர் உடுகம்பொலவை தங்கக் கடத்தல்கள் விவகாரம் தொடர்பாக கைது செய்தபோது, இருவருக்கும் இடையில் முறுகல் நிலை வலுவடைந்தது.

இந்நிலையில், டி.ஐ.ஜி. உடுகம்பொல தலைமறைவாகியதோடு, ஜனாதிபதி பிரேமதாசாவின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கிய கறுப்பு பூனைகள் புரிந்த கொலைப்பட்டியலையும் வெளியிடப் போவதாக அறிவித்தார். ஆனால், பிரேமதாசாவின் கறுப்பு பூனைகள் குறித்து அச்சமடைந்த உடுகம்பொல ஏதோ ஒரு விதத்தில் நாட்டை விட்டு வெளியேறினார். இதற்கு வெளிநாட்டு தூதரகம் ஒன்று உதவியதாக அப்பொழுது பேசப்பட்டது.

ஆனால் பிரேமதாசாவிற்கும் உடுகம்பொலவிற்கும் இடையில் ஏற்பட்ட மோதலானது நீதிக்கான போராட்டமோ அன்றி, அறத்திற்கான போராட்டமோ அல்ல, இவர்களுக்கிடையில் திருட்டுப் பொருள்களை பங்குபோடும் போது எழுந்த பிரச்சினை போன்றது. அதாவது, 1988,1989 ஆம் ஆண்டுகளில் படுகொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் சுமார் 60,000 சிங்கள இளைஞர்களின் படுகொலைக்கு பிரேமதாசா தலைமையில் இயங்கிய கறுப்பு பூனைகளின் பங்கு என்ன? டி.ஐ.ஜி உடுகம்பொலவின் தலைமையில் இயங்கிய பொலிஸ் குழுவின் பங்கு என்ன என்பதே ஆகும்.

இதில் பிரேமதாசாவின் பங்கே கணிசமானது எனப்பரவலாகக் கருதப்படினும் இதில் டி.ஐ.ஜி. உடுகம்பொலவின் பங்குகுறிப்பிடக்கூடியது. மனித உரிமை ஸ்தாபனங்களும் அவ்வாறே கருதுகின்றன. இருப்பினும், டி.ஐ.ஜி உடுகம்பொல நாடு திரும்பியுள்ளார். தம்மீது உள்ள குற்றச்சாட்டுகள் வழக்குகள் வாபஸ்பெறப்படும்அல்லதுசாதகமாகப் பரிசீலிக்கப்படும்என்றஉத்தரவாதம் இல்லாமல் உடுகம்பொல ஒருபோதும் நாடு திரும்பியிருக்கப்போவதில்லை. இதனைவலியுறுத்துமாப் போலவேபுதியஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா உடுகம்பொல சந்திப்பும், உடுகம்பொலவிற்கு ஓய்வூதியம் வழங்க அரசு எடுத்த முடிவும் உள்ளது.

இந்நிலையானது 1988 1989 ஆம் ஆண்டுகளில் நடந்த படுகொலைகளுக்கு எல்லாம் பிரேமதாசாவை பொறுப்பேற்க வைக்கும் நடவடிக்கை என்றே துணிந்து கூறலாம். "இறந்தவர்கள் என்றும் கதை சொல்வதில்லை" என்பதினால் இனிமேல் தன்மீதான எந்தக்குற்றச்சாட்டிற்கும் பிரேமதாசா பதில்சொல்லப்போவதில்லை. அவரதுகுடும்பம் கூட ஓரளவு புறந்தள்ளப்பட்டுள்ளது. ஆகையினால் மௌனமாகக் குற்றச்சாட்டுக்களை அவரது சமாதிஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். ஏனெனில் அவர் ஆட்சியின் போது போதியளவு கறை அவர் மீது பட்டுவிட்டது.

தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொலிசார் 23 ஆண்களையும், 5 பெண்களையும் கைதுசெய்துள்ளனர்.

களுக்கு செல்வதற்காக கொழும்புக்கு சென்றுதங்கியிருந்த சிலரும் இருப்பதாகக் கூறப்படுகிறன்து.

சட்டவிரோத கொலை தொடர்பான

## விசாரணைக்கு கோரிக்கை எதிர்க்கட்சிகள் மீளாய்வு

சட்டத்திற்கு புறம்பான வகையில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பாக முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல வெளியிட்ட சத்தியக் கடதாசியின் அடிப்படையில் விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்ககோரிய எதிர்க்கட்சிகளின் நிலை தொடர்பாக ஆராய்வதற்காக எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூடி ஆராயவுள்ளனர்.

எதிர்க்கட்சிகளோடு நெருங்கிய வட்டாரங்களின் கருத்துப்படி பிரேமதாசா உடுகம்பொலவின் வருகையின் பின்னர் இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நியாயமான விசாரணை நடத்தப்படக் கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

(கொழும்பு)

சத்தியப் பிரமாணம் எடுப்பதற்கும், கூட்டங்களில் பங்கு பற்றுவதற்கும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர்கள் சந்திரசேகரனுக்குள்ள அடிப்படை உரிமை மறுக்கப்படுமாயின் அதற்கு அவர் சட்டரீதியான சகல முயற்சிகளிலும் ஈடுபடுவார் என்று முன்னணியின் பேச்சாளரான ஏ லோரன்ஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தடுத்து வைப்பது சட்டவிரோதம் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்புக் கூறி, செலவுத் தொகை வழங்கப்பட்ட பின்னரும் அவர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பது ஜனநாயகத்தையும் தேர்தலில் அலட்சியம் செய்வதாகவுள்ளது என்று தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சே இதற்கு முழுப் பொறுப்பாக இருக்கும்போது அவைத்தலைவர் சட்டமா அதிபருடன் பேசுவதில் எந்த பிரயோசனமும் இல்லை. இது தொடர்பாக அரசின் நடவடிக்கையை அவதானித்து வருகின்றோம்.

மேலும் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் அவர் மாகாண சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வது அவரின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு உத்தரவாதம் அளிக்காது எனவே தான் சந்திரசேகரனை பிணையில் விடக் கோருகின்றோம் என்றும் தெரிவித்தார்.

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் இருக்கும் தமிழ்மொழிமூல பாடசாலைகள் ஒவ்வொன்றிற்கும், சிங்களம் போதிக்கும் ஆசிரியர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு உள்ளார். இவ்வாறு அம்பாறை மாவட்ட கல்விப் பணிப்பாளர் வில்பேட் பெரேரா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; அத்துலத்முதலி கல்வி அமைச்சராக இருந்தபோது தாம் அம்பாறை மாவட்டக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார் எனவும், ஆசிரியப் பற்றாக்குறையை போக்கும் முகமாகவே சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டனர் எனவும் கூறியுள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக

## ஜே. பி. சியின் முன்பாக ராவ் சாட்சி அளிக்க வேண்டும்

-ராம் ஜெத்மலானி

[டில்லி]

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தேர்தல் நன்கொடை பெற்றது சம்பந்தமாக விசாரிக்கப்பட வேண்டும் என மேத்தாவின் வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி ஊழல் பற்றி விசாரித்து வரும் கமிட்டிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கோரி இருப்பதாக உள்ளூர் செய்தி ஸ்தாபனங்கள் கூறின.

பணம் நிறைந்த சூட்கேசை ராவிடம் கொடுத்ததாக விடுத்த அறிக்கையில் ஹர்ஷத் மேத்தா உறுதியுடன் இருப்பதாகவும் ஜெத்மலானி கூறியிருக்கிறா .

மேத்தா குறிப்பிட்ட தினத்தில் காலை 10 45 மணிக்கு தாம் ராவிடம் பணம் கொடுத்ததாக கூறியிருப்பதை மறுத்துள்ள இந்திய அரசாங்கம் அச்சமயத்தில் பிரதமர் தனது வீட்டில் இருக்கவில்லை என்றும் கூறியுள்ளது

மேத்தாவின் அறிக்கை வெளியான மூன்று தினங்களுக்குப் பின் இந்த மறுப்பு வெளியிடப்பட்டது. அரசாங்கம் தனது மறுப்பை வெளியிடும் முன் தனக்குச் சாதகமான முறையில் வாக்கு மூலங்களை தயார்செய்திருப்பதாக தனது கட்சிக்காரர் நம்புவதற்கு காரணம் உண்டு என்றும் ஜெத்மலானி கூறியுள்ளார்.

128 கோடி டாலர் பங்குச் சந்தை ஊழல் குறித்து விசாரணை நடத்தி வரும் கூட்டுப் பாராளுமன்ற கமிட்டி முன்பாக ராவ் சாட்சியம் அளிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்

## பெருந்தொகை கைமாற்றம் விசாரணை நடை பெறுகிறது

சி. பி. ஐ. தகவல்

(டில்லி)

பங்குச் சந்தை ஊழல் தொடர்பாக பங்குத் தரகர் ஹர்சத் மேத்தா தெரிவித்துள்ள குற்றச் சாடடுக்கள் பற்றிய விபரங்கள் தெரியவந்திருப்பதாக மத்திய புலனாய்வுக் கழகம் (சி. பி. ஐ ) கூட்டும் பாராளுமன்றக் குழு முன்னிலையில் கூறியுள்ளது. அரசியல் ரீதியில் பெரும் தொகைகள் கைமாற்றப்பட்டது பற்றியும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அது மேலும் கூறியுள்ளது.

கூட்டுப் பாராளுமன்றக்குழு முன்பாக ஆறு மணி நேரம் தொடர்ந்து சாட்சியமளித்த சி. பி. ஐ யினர் மேற்கொண்டு தொடரப்பட இருக்கும் விசாரணைகளுக்கு குந்தகம் ஏற்படும் என்பதால் மேலதிக விபரங்கள் எதையும் வெளியிட முடியாது எனவும் கூறியுள்ளனர்.

## சி.பி.ஐ. விசாரணைக்கு உதவ வெளிநாடுகட்கு கோரிக்கை

பங்குச் சந்தை ஊழல் மோசடி தொடர்பாக விசாரணை நடத்தி வரும் சி. பி. ஐ யினர் தமது விசாரணைக்கு உதவும்படி கோரும் கடிதங்களை அமெரிக்கா, பிரிட்டன் ஐக்கிய அரபு எமிரேட் மற்றும், ஸ்பெயின், மாலைதீவு சானல் தீவு அரசுகளுக்கு அனுப்பி இருப்பதாக சி. பி. ஐ தலைவர் கூட்டுப் பாராளுமன்றக் குழுவின் முன்பாகச் சாட்சியம் அளிக்கும்போது குறிப்பிட்டார்.

முகாம்களிலுள்ள அகதிகள் தொடர்பான

# தமிழக அரசு ஆணைகுறித்து பிரிட்டன் அகதிகுழு கவலை

(லண்டன்)

தமிழக அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் மீது தமிழக அரசு புதிது புதிதாக பல கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பாக லண்டனில் இருக்கும் பிரிட்டன் அகதிகள் கவுன்ஸில் கவலை தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் உள்ள கிறிஸ்டியன் எய்ட் அமைப்பின் இயக்குநர் ஆல்ஃப் டப்ஸ், மற்றும்சுவிட்லாந்தின் வேர்ல்ட் கவுன்ஸில் ஆப் சர்ச்சஸ், இத்தாலியின் கமிட்டி இன்டர் நேஷனல், இந்தியாவின் ஜேசுயிட் அகதிகள் சர்வீஸ்ஹாலந்தின் டச்சு இன்டர் சர்ச் எயிட் ஆகிய அமைப்புகளின் இயக்குனர்களால் ஒப்பம் இடப்பட்டு தமிழக ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டி, முதல்வர் ஜெயலலிதா ஆகியோருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ள கடிதத்தில், மேலும் முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு தமிழ் நாட்டில் உள்ள தொண்டு நிறுவனங்கள் வழங்கிய சேவைகள் மே 27-ம் திகதி முதல் கட்டுப்படுத்தப் பட்டிருப்பதாக தமிழக அரசு வெளியிட்டுள்ள ஆணை குறித்தும் அகதிகள் வெளியிடங்களுக்கு வேலைக்கு செல்வது கட்டுப்படுத்தப்பட்டிருப்பது குறித்தும் கவலை கொள்வதாகவும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை அகதிகள் பிரச்சினையில் தமிழக அரசு மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளும் என்று மனப்பூர்வமாக நம்புவதால் தமிழகஅரசு தனதுஆணையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## அகதிகளுக்கு கப்பல்சேவை இந்த ஆண்டில் இருக்காது

(சென்னை)

தமிழ்நாட்டில் தங்கியுள்ள அகதிகளை கப்பல் மூலம் அனுப்பும் வாய்ப்பு இந்தஆண்டில் சிறிதும்இல்லை என்று தெரியவருகிறது.

இராமேசுவரத்திலிருந்து அகதிகளை திருப்பி அனுப்பும் பணிக்கென இதுவரை பயன் படுத்தப்பட்டு வந்த ராமானுஜம் என்னும்கப்பல் இப்போது அந்தமான் தீவில் உள்ள சிறு சிறு தீவுகளுக்கு இடையே பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் இந்தக் கப்பல் இராமேசுவரம் கொண்டு வரப்படுவதற்கு இயற்கைச் சூழல் சாதகமானதாக இல்லை என்றும் தெரிய வருகிறது. மேலும் இராமேசுவரத்திற்கு அண்மித்தான கடற்பகுதியில் அக்டோபர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை கப்பல் போக்குவரத்து மேற்கொள்ளப்படுவதற்கு பருவகாலம் இடம் தராது என்றும் இதனால் அகதிகளுக்கான கப்பல் சேவை இந்த ஆண்டில் நடைபெறும் வாய்ப்பு இல்லை என்றும் கூறப்படுகின்றது.

## அரபாத் ராஜினாமா

(பெய்ரூட்)

பாலஸ்தீன விடுதலை முன்னணியின் மத்தியகுழு தலைமைப் பதவியை யசீர் அரபாத் இராஜினாமா செய்துள்ளார். மத்தியகுழுவில் நிதிப்பிரச்சினை தொடர்பாக எழுந்த காரசாரமான விவாதங்களை தொடர்ந்து அரபாத் இவ் அமைப்பின் தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்தார்.

தமிழகத்தில் பிற மாநிலத்தவர்

## சொத்து வாங்குவதை தடைசெய்யக் கோரிக்கை

(சென்னை)

பிற மாநிலத்தவர்கள் தமிழ் நாட்டில் நிலம் மற்றும் சொத்துக்கள் வாங்குவதற்கு தடை விதிக்க வேண்டுமென்று தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் ப. நெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக தேவைப் பட்டால் சட்டத் திருத்தங்களையும்தமிழக அரசுஏற்பாடு செய்யவேண்டுமெனவும் காஷ்மீர்மற்றும் நாகலாந்துமாநிலங்களில் பிறமாநிலத்தவர் சொத்து வாங்கமுடியாது. திரிபுரா மாநிலத்தில் பழங்குடியினர் பகுதியில் வேறுயாரும் சொத்து வாங்க முடியாது. இதுபோல் தமிழகத்திலும் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# பண்புள்ள இனமொன்றுடன் பகைமைகாட்ட வேண்டுமா?

## விடுவிக்கப்பட்டவரின் உறவினர் கேள்வி

(கொழும்பு)

"கடந்த மூன்று வருடகாலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இருந்த எனது சகோதரரும், ஏனைய பொலிசாரும் தமது விடுதலைகோரி சுயமாகவே சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கினர். இதில் யாருடைய பலவந்தமும் இருக்கவில்லை. இதனை நான் என் சகோதரர் மூலமும், ஏனைய அவரது சகாக்கள் மூலமும் தெரிந்து கொண்டேன்" என விடுவிக்கப்பட்ட யுத்தக்கைதி ஒருவரின் சகோதரரான வீலானந்த விதானகே கொழும்பில் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; "நாங்கள் யாழ்ப்பாணம் சென்றபோது வேறு இடமாக நினைக்கவில்லை. விடுதலைப் புலிகளும், அங்குள்ள மக்களும் சகோதரவாஞ்சையுடன் எங்களுடன் மனம்விட்டுப்பழகினர். தம்மை நன்றாக உபசரித்தனர். இவ்வாறான பண்புள்ள இனம் ஒன்றுடன் நாம் ஏன் பகைமை உணர்வைக் காட்ட வேண்டும்? அவர்களை ஏன் எதிரிகளாக நினைக்கவேண்டும்? அங்குள்ள மக்கள் தமது துயரங்களை மனம்விட்டுக் கூறினர். அவர்கள் போரினால் அனுபவிக்கும் துன்பங்களை கேட்டு நாங்கள் மனம் வெதும்பினோம். நெஞ்சு வெடித்து விடும்போல் இருந்தது.

குண்டுவீச்சினால் யாழ்ப்பாண நகரம் சிதைந்துபோய் இருக்கிறது. இடிபாடுகளைச் சென்றுபார்த்தோம். சுதந்திரமாகவே நடமாடினோம். பாஷைப் பிரச்சினை எங்களுக்கு இருக்கவில்லை.

அங்குள்ள மக்களும் எமது சகோதரர்கள் ஆவர். பெரும்பான்மையினரான சிங்கள மக்களும் சகல பேதங்களையும் மறந்து அவர்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண முன்வர வேண்டும். இளைஞர்கள் எந்த இனமாக இருந்தாலும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது அரசாங்கத்தின் கடமையாகும்.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் பாதுகாப்பிலுள்ள பொலிசாருக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் விருந்தினர்கள்போல் நடத்தப்பட்டு வருகின்றனர் என்றார்.

விடுவிக்கப்பட்ட மற்றொரு யுத்தக்கைதியின் உறவினரான முதியானசலாகே சிலவத்தி என்ற பெண் கூறுகையில்;

யாழ்ப்பாணத்திற்கு நான் சென்றது இதுவே முதல் தடவையாகும். யாழ்ப்பாணத்தைப் பற்றியும், அங்குள்ளவர்கள் பற்றியும் நான் கேள்விப்பட்டதற்கு எதிர்மாறாகவே அங்கு இருந்தது. அங்குள்ளவர்கள் மிகவும் பாச உணர்வுடன் நடந்துகொண்டனர்.

நமது நாட்டில் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் இதை அரசாங்கமும், பெரும்பான்மை மக்களும் உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

எமது தேவைகளைப்போன்றதே தமிழ் மக்களினது தேவைகளுமாகும். இதனைப் புரிந்துகொள்ளாதவரையில் இந்தநாட்டில் உயிரிழப்புகள் தவிர்க்கமுடியாதனவாகிவிடும் பாவம் யாழ்-மக்கள். உணவுப் பொருள்களுக்காக பெரும் கஷ்டப்படுவதாகத் தெரிவித்தனர். எமக்குப் பணம் இருந்தால் சகல பொருள்களும் கிடைக்கின்றன. நமது சகோதரர்களான அவர்களுக்கு இப்பொருள்கள்கிடைக்கவேண்டும்

இதனால் வடபகுதி மீதான உணவுப் பொருள் தடையைக் கட்டாயம் நீக்கியே ஆகவேண்டும் என அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

### சிக்கிய

வந்த இவர் இடம் பெயர்ந்து இடைக்காட்டில் தங்கிவந்ததாகவும், தனது வீட்டைப் பத்தைமேனியில் பார்ப்பதற்காகத் சென்றபோதுமிதிவெடியில் சிக்கியுள்ளார். (யோ)

## கேணல் கிட்டு உருவப்பட திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை துறட்டிப்பனை இடம்பெயர்ந்தோர் முகாம் நடாத்தும் 'கேணல் கிட்டு அவர்களின் உருவப்பட திரைநீக்கமும், சிறுவர் பாடசாலைதிறப்புவிழாவும்' நாளை திங்கட்கிழமை பிற்பகல் நடைபெறும் மேற்படி முகாம் தலைவர் திரு. ஜ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, 'போரூட்' திட்ட இணைப்பாளர் திரு. கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். கேணல் கிட்டு அவர்களின் உருவப்படத்தினை திரு. இளம்பரிதி திரை நீக்கம் செய்து வைப்பார். சிறுவர் பாடசாலையை திரு. கணேசலிங்கம் திறந்து வைப்பார். அத்துடன் விளையாட்டுப்போட்டிகள், வடபிரதேச நல்லொழுக்க வாலிப சம்மேளனத்தினரின் மதுவிலக்குச் சம்பந்தமான கருத்தரங்கு என்பனவும் இடம்பெறும். (22)

## முஸ்லிம் பா. உ. கூட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு இணைப்பு தொடர்பான உத்தேச வாக்கெடுப்பு பற்றி ஆராய்வதற்காக கூட்டப்பட இருந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் ஒத்திப்போடப்பட்டுள்ளது. இந்தக் கூட்டம் இன்று ஞாயிறன்று நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது தெரிந்ததே.

### இரு பெண்கள்

மட்டக்களப்பு நகருக்கு அண்மையில் உள்ள ஊறணி சோதனை முகாமில் கடந்த 24ஆம் திகதி கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## புலிகள் - இராணுவம் யுத்த நிறுத்தம் வேண்டும்

### பாரதீய ஜனதா கோரிக்கை

விடுதலைப்புலிகளும் அரசுப் படைகளும் உடனடியாகப் போர் நிறுத்தத்துக்குச் சம்மதம் தெரிவித்து யுத்த நிறுத்தம் அறிவிக்கப்படவேண்டும்.

இவ்வாறு பாரதீய ஜனதாக் கட்சியின் துணைத் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி தெரிவித்திருக்கிறார்.

இனப் பிரச்சினையை எப்படித் தீர்க்கலாம் என்று சில யோசனைகளை ஜனா கிருஷ்ணமூர்த்தி வழங்கும் போது இவ்வாறு கூறியிருக்கிறார்.

அவர் யோசனைகள் வருமாறு: போர் நிறுத்தம் அமுல்படுத்தும் தினம் அன்று இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இராணுவமும், புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் புலிகளும் என எவரெவர் எந் நிலையில் இருக்கிறார்களோ அந் நிலையிலேயே இருப்பார்கள் என இரு தரப்பினரும் ஏற்க வேண்டும்.

புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து சமாதானத் தீர்வுக்கு வர வேண்டும் என்ற நிபந்தனையை சிறிலங்கா அரசு வற்புறுத்தக் கூடாது

இதன்பிறகு ஒரு வட்ட மேசை மாநாடு கூட்டப்பட வேண்டும். தமிழர் பிரதிநிதிகளான புலிகளுக்கும் மாநாட்டில் பிரதான பங்கு அளிக்கப்படவேண்டும்.

புலிகளின் பிரதிநிதிகள், தமிழ் அரசியல்கட்சியின் பிரதிநிதிகள் அழைக்கப்படல் வேண்டும். சிங்கள பௌத்த குழுக்கள், பிரதான அரசியல் கட்சியினர் மற்றும் அரசின் முக்கிய தலைவர்கள் இந்த வட்ட மேசை மாநாட்டில் பங்குபற்ற வேண்டும்.

தமிழர், சிங்களவர், பௌத்தர் என பாகுபாடு காட்டாமல் அனைவருக்கும் சம உரிமைகள், சமவாய்ப்புக்கள், நீதி கிடைக்கும் வகையில் அனைவரும் சேர்ந்து சகோதர முறையில் கூட்டு முயற்சியினால் இலங்கையின் ஒற்றுமை, இறைமை வளம்பெறச் சகோதர அரசு அமைப்புகளையும், பாதுகாப்பையும் உருவாக்க முன்வரவேண்டும்.

ஒற்றை ஆட்சி என்பதிலிருந்து மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் மத்திய அரசுக்கு குறிப்பிட்ட அதிகாரங்கள் என்ற வகையில் மாநாட்டில் விவாதிக்கப்படலாம்.

## வாதுவ கப்பல் நாளை வந்து சேரும்

(யாழ்ப்பாணம்)

அரிசி, சீனி மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் வாதுவ எனும் கப்பல் நாளை காலை 7.00 மணிக்கு பருத்தித்துறை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக் கப்பலில் 54710 மூடை அரிசி, 2500 பைக்கற்பால்மா, 16006 மூடை சீனி, 2042 மூடை மைசூர்பருப்பு, மற்றும் 2210 பாடசாலை தளபாடங்கள், பாடசாலை புத்தகங்கள், தேயிலை, சவர்க்காரம், சைக்கிள் ரயர் ரியூப், தபால் பை-3 பிட்டுமண், நீரிறைக்கும் இயந்திரம் என்பன எடுத்து வரப்படுகின்றன.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினால் நடாத்தப்படும் பத்திரிகையாளர் பயிற்சி நெறி பெற்றவர்களுக்கும், தற்போது பயிற்சி நெறி பெறுபவர்களுக்கும் உரிய கருத்தரங்கு ஒன்று நாளை பிற்பகல் 4 00மணிக்கு கிளைத் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.


ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)

தெய்வேந்திரா (சாவகச்சேரி)

திரையரங்குகளில்




தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30மணி, மாலை 4.00 மணி, 6.00 மணி

(சி-6867)


## மரண அறிவித்தல்கள்

திருமதி

### செல்லத்துரை இரத்தினம்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை இரத்தினம் 26-06-93 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. செல்லத்துரையின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, மல்லிகாதேவி, தவபாலசந்திரன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரசேகரன் (ஹட்டன்), சண்முகநாதன் (முன்னாள் ஓவசியர்), பாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுரேகா, சுரேசன், உசாந்தினி, சுஜன், சுஜித்தா, தாரணி

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 26-6-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10074

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-4024, 27-8754, 28-4147, 24-1259, 27-7537, 26-2764, 28-6748, 28-1862, 41-8031, 26-1285, 42-3726, 22 3088 40-7583, 27-6769, 24-9549, 28-8367, 27-9771, 27-5186, 27-6762, 24-9489, 27-4239, 26-5725, 24-8391, 24-3436, 41-5178,

வெதும்பினோம். நெஞ்சு

சிக்கிய

வந்த இவர் இடம் பெயர்ந்து இடைக்காட்டில் தங்கிவந்ததாகவும், தனது வீட்டைப் பத்தைமேனியில் பார்ப்பதற்காகச் சென்றபோது மிதிவெடியில் சிக்கியுள்ளார். (யோ)

விப்பட்டதற்கு எதிர் மாறாகவே அங்கு இருந்தது. அங்குள்ளவர்கள் மிகவும் பாச உணர்வுடன் நடந்துகொண்டனர்.

நமது நாட்டில் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் இதை அரசாங்கமும், பெரும்பான்மை மக்களும் உணர்ந்து கொள்வது அவசியமாகும்.




தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30மணி, மாலை 4.00 மணி, 6.00 மணி

(சி-6867)

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## செல்லத்துரை இரத்தினம்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை இரத்தினம் 26-06-93 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. செல்லத்துரையின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, மல்லிகாதேவி, தவபாலசந்திரன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரசேகரன் (ஹட்டன்), சண்முகநாதன் (முன்னாள் ஓவசியர்), பாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுரேகா, சுரேசன், உசாந்தினி, சுஜன், சுஜித்தா, தாரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற S.K. கணபதிப்பிள்ளை, மாணிக்கம் பாக்கியம், செல்லையா செல்லம்மா, இராசா இராசம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்ற பின்னர் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
செ. சண்முகநாதன்
(மருமகன்)

(5229)

## G.V. சுப்பிரமணியம் (ஜே.பி.யு.எம்)
(சட்டத்தரணியும் நொத்தாரிசுவும்)

நவிண்டில் கரவெட்டியைச் சேர்ந்த கந்தவனம் வயிரமுத்து சுப்பிரமணியம் 25-06-1993 வெள்ளி இரவு சிவபதமெய்தினார். இவர் காலஞ்சென்ற தங்கம் (மாணிக்கம்) அவர்களின் அன்புக் கணவரும், அன்னம்மாவின் சகோதரரும் காலஞ்சென்ற இ. மயில்வாகனத்தின் மைத்துனரும், சரோஜினி தேவி, தனலக்சுமிதேவி (கனடா) புனிதாம்பிகை, யோகாம்பிகை ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஞானசவுந்தரம் (பகுப்பாளர் - நீர்ப்பாசனத்திணைக்களம் கொழும்பு) சண்முகதாசன் (தொலைத்தொடர்பு பொறியியலாளர் - கனடா) குமாரசாமி, (சட்டத்தரணி) பாலகுமார் (ஸ்ரீ கிருஷ்ணா-கொழும்பு) புலேந்திரன் (இ. போ. ச. பருத்தித்துறை) தேம்பாமலர், காந்திமலர், சோதிமலர், இராமநாதன் ஆகியோரின் மாமனாரும், பத்மாவதி ஸ்ரீஸ்கந்தராசா, புனிதவதி ஆகியோரின் சிறிய தகப்பனாரும் சுகந்தினி, தயாளன் (பொறியியல் பீடம் 1-ம் ஆண்டு பேராதனை), கஜேந்தினி, மிறாளினி, பிரசாந்தினி, சுஜோசனா, கிருத்திகன், சுதர்சன், ஆகியோரின் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் 26-06-1993 இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. குமாரசாமி
(மருமகன்)

நவிண்டில்,
கரவெட்டி.
26-6-1993

[5228]


# விசேட சேவை

- ★ பாடசாலை மாணவர்களுக்கு போஸ்ரல் அடையாள அட்டைப் படங்கள்
- ★ பாஸ்போட் படங்கள்
- ★ தேசிய அடையாள அட்டைப் படங்கள்
- ★ கறுப்பு வெள்ளைப் படங்கள்
- ★ அடையாள அட்டை கவரிடுதல்
- ★ பல விதமான வர்ணப் படங்களுடன் அல்பம், ஆட்டோகிறாப் விற்பனையாகின்றது.

உங்கள் இல்லங்களில் நிகழும் மங்களகரமான வைபவங்களுக்கு கலர்ப்படம் எடுத்து உங்கள் உள்ளங்களை மகிழவைக்கின்றது.

இன்றே நாடுங்கள்

'இளந்தென்றல்'

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்கின்றது.

உங்களின் தேவையே எங்களின் சேவை

# இளந்தென்றல்

14, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6901)


இக் கப்பலில் 54710 மூடை அரிசி, 2500 பைக்கற்பால்மா, 16006 மூடை சீனி, 2042 மூடை மைசூர்பருப்பு, மற்றும் 2210 பாடசாலை தளபாடங்கள், பாடசாலை புத்தகங்கள், தேயிலை, சவர்க்காரம், சைக்கிள் ரயர் ரியூப், தபால்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினால் நடாத்தப்படும் பத்திரிகையாளர் பயிற்சி நெறி பெற்றவர்களுக்கும், தற்போது பயிற்சி நெறி பெறுபவர்களுக்கும் உரிய கருத்தரங்கு ஒன்று நாளை பிற்பகல் 4.00மணிக்கு கிளைத் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 26-6-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10074

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-4024, 27-8754, 28-4147, 24-1259, 27-7537, 26-2764, 28-6748, 28-1862, 41-8031, 26-1285, 42-3726, 22-3088 40-7583, 27-6769, 24-9549, 28-8367, 27-9771, 27-5186, 27-6762, 24-9489, 27-4239, 26-5725, 24-8391, 24-3436, 41-5178, 27-8959, 26-6309, 28-2212, 27-1122, 24-5121.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-6197, 24-6646, 24-7173, 27-8149, 27-7711, 28-3306, 41-2479, 42-3615, 27-2016, 42-0962.

## முதலாம் ஆண்டு வீர அஞ்சலி

தாயின் மடியில்
22 — 03 — 1972



தாயக மண்ணில்
27 — 06 — 1992

### லெப். சிலம்பரசன் (றம்போ)
(பரமானந்தன் தயாளன்)

கலங்காத நெஞ்சு கொண்டாய்
களத்திலே நீ மாண்டாய்
சிலம்பரசா! எங்கள்
சிந்தையிலே நீ நிறைந்தாய்!
இறப்பேது உந்தனுக்கு
இன்றும் நீ இருக்கின்றாய்
மறப்போமா உன் நினைவை
மனம் நிறைந்த எம் வீரா!
ஆண்டு ஒன்றாகியது
ஆனாலும் உன்நினைவு
மீண்டும் மீண்டும்
எம்மனதில் நீ இருப்பாய்
தாண்டிக்குள மோதல்
உன் தனியான துணிவு சொல்லும்
வேண்டும் உன் பிறப்பு மீண்டும்
விலையில்லா எம் தயாளா!

(5230) — நண்பர்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.